

Saint Paphnutius

SEP 11

புனித பப்னுசியுஸ் (~350)

இவர் எகிப்து நாட்டைச் சேர்ந்தவர் காட்டில் புனித அந்தோனியாரோடு சில காலம் வாழ்ந்தார். பின்னர் இவரை ஒரு பட்டணத்தின் ஆயராக்கினார்கள். இவர் காலத்தில் ஒரு வேத கலாபனை தொடங்கியது. இவரது வலது கண்ணை பிடுங்கி விட்டார்கள். இடது முழங்காலை அடித்துக் கோரப்படுத்தினார்கள். சுரங்கங்களில் வேலை செய்ய இவரை அனுப்பினார்கள். வேத கலாபனை முடிந்ததும், இவர் முன்போல், ஆரிய பதித கொள்கைகளை முழு மூச்சுடன் எதிர்த்தார். பேரரசரான மகா கொன்ஸ்தாந்தின் இவரை அடிக்கடி கலந்து ஆலோசிப்பார். இவரை விட்டுப் பிரியும் போது பிடுங்கப்பட்ட இவருடைய கண் இருந்த இடத்தை ஆசாரத்துடன் முத்தமிடுவார். அந்தக் காலத்தில் சில குருக்கள் மணம் முடித்திருந்தார்கள். குருப்பட்டம் பெறுவதற்கு முன் மணம் முடித்தவர்கள் தங்கள் மனைவியரை விட்டுவிடுவதா என்பதை அவர்கள் கையில் விட்டுவிடலாம் என் நம் புனிதர் கூறினார். குருப்பட்டம் பெறும் பொழுது மணம் முடிக்கவில்லையானால் அவர்கள் எப்பொழுதும் திருமணமின்றியே இருக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறினார். 337~ஆம் ஆண்டில் இவர் ஒரு பொதுச் சங்கத்திற்குப் போய், புனித அத்தனாசியுஸ் என்பவரை ஆதரித்துப் பேசினார்.

சிந்தனை

இயேசுவுக்காக துன்பப்படுவது பெரும் பாக்கியம் இவ்விதம் துன்பப்படுகிறவர்களுக்கு இயேசு தமது ஞானத்தைத் தருகிறார்.

செபம்

இயேசுவே, உமக்காக துன்பப்படுவது பெரும் பேறு என்பதை மக்கள் உணரச் செய்யும்.